


**19. 07. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மோல்டோவா, மேசிடோனியா, ருமேனியா உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அரசு முறை பயணமாக இன்று புறப்பட்டார்.

2. இந்திய கைவினை கலைஞர்கள் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை பெற ”ஒரு மாவட்டம் ஒரு பொருள்” முன்னெடுப்பு வழிகோலுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை தொடங்கும் நிலையில் அனைத்து கட்சி கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

4. பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

5. FIFA உலக கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் அர்ஜென்டினா இன்று ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

***************

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மோல்டோவா, மேசிடோனியா, ருமேனியா உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒருவார கால அரசு முறை பயணமாக இன்று புறப்பட்டார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக நாளை மால்டோவா செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் மயாசந்து-வுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர், உள்ளிட்டோரையும் குடியரசு தலைவர் சந்தித்து பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

தமது பயணத்தின் இரண்டாம் கட்டமாக நாளை மறுநாள் மெசிடோனியா செல்லும் அவர், அந்நாட்டு தலைவர்களுடன் வேளாண்மை, மருந்தியல், அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

இறுதிகட்டமாக வரும் 23ஆம் தேதி ருமேனியா செல்லும் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபரை சந்திக்கிறார்.

***************

பிரதமர்

இந்திய கைவினை கலைஞர்கள் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை பெற "ஒரு மாவட்டம் ஒரு பொருள்" முன்னெடுப்பு வழிகோலுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புத்தாக்கத்துடன் வடிவமைக்கப்படும் நமது பாரம்பரிய கைவினை பொருட்கள் உலகளாவிய வரவேற்பை பெற்றுள்ளதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டி பிரதமர் வெளியிட்ட

செய்தியில் இதன்மூலம் நீடித்த வாழ்வாதாரம், உறுதி செய்யப்படுவதுடன் நமது பாரம்பரியம் வலுப்பட்டு பாதுகாக்கப்படுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

சுதந்திர போராட்ட வீரர் மங்கள் பாண்டேயின் தன்னிகரற்ற தியாகம் மற்றும் வீர தீரத்தை ஒவ்வொரு இந்தியரும் பெருமையுடன் நினைவு கூறுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அன்னாரது 199ஆவது பிறந்த நாளை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில் மங்கள் பாண்டேயின் நாட்டுப்பற்று வரும் கால தலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

***************

<u>அனைத்து கட்சி கூட்டம்</u>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை தொடங்கும் நிலையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

மத்திய அமைச்சர்கள் திரு.கிரண் ரிஜிஜூ, திரு.ஜே.பி.நட்டா உள்ளிட்டோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் மழைக்கால கூட்டத்தொடரை ஆக்கப்பூர்வமாக நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

இதனிடையே திரிணாமுல் காங்கிரஸ் அதிருப்தி உறுப்பினர்களுக்கு பிஜேபி ஆதரவு அளிப்பதாக கூறி காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, இடதுசாரிகள், ஆம்ஆத்மி, உத்தவ் தாக்கரேயின் சிவசேனா பிரிவு உள்ளிட்ட எதிர்கட்சிகள் அனைத்து கட்சி கூட்டத்திலிருந்து முதலில் வெளிநடப்பு செய்தனர்.

இருப்பினும் தங்களது எதிர்ப்பை பதிவுசெய்த பின் அவர்கள் மீண்டும் அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்றனர்.

அடுத்த மாதம் 13ஆம் தேதிவரை நடைபெறும் மழைக்கால கூட்டத்தொடரில் பல்வேறு முக்கிய சட்ட

திருத்த மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

***************

<u>மன்சூக் மாண்டவியா</u>

ஆரோக்கிய இந்தியாவை உருவாக்க பொதுமக்கள் சைக்கிள் பயணத்தை தங்களது வாழ்வியல் முறையாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய விளையாட்டுத்துறை டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் 82ஆவது ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சி இயக்கத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் சைக்கிள் பயணங்களின் மூலம் உடற்தகுதி மேம்படுவதோடு, எரிபொருள் சேமிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க முடியும் என்றார்.

நாடுமுழுவதும் உள்ள ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களை சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுகாதார பணியாளர்கள் இந்த விழிப்புணர்வு இயக்கத்தில் இன்று பங்கேற்றனர்.

***************

<u>ஜெய்சங்கர்</u>

இந்தியா - தான்சானியா இடையே உயர்கல்வி, திறன் கட்டமைப்பு, சுகாதாரம் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தான்சானியா அதிபருடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்ட பின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் ஸான்ஸிபர் வளாகத்தில் செயல்படும் சென்னை ஐஐடி பிரிவு, ஆப்பிரிக்காவின் கல்வி மற்றும் மேம்பாட்டிற்கு இந்தியா முன்னுரிமை அளிப்பதை உறுதியுடன் எடுத்துரைப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

***************

தேசிய விருது

தேசிய விருதுபெற்ற திரைப்பட கலைஞர்களுக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழ் திரைப்பட இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்ட பல்வேறு கலைஞர்கள் உலக அளவில் சாதனைகளை படைக்க வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு.விஜய் வெளியிட்ட வாழ்த்து செய்தியில் சிறந்த நடிகர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த சண்டை பயிற்சியாளர் உட்பட 10 தேசிய விருதுகளை தமிழ் திரையுலகினர் வென்றது பெருமைக்குரியது என பாராட்டியுள்ளார்.

***************

அன்புமணி

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இதனை வலியுறுத்தி கையெழுத்து இயக்கத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், சென்னையின் முக்கிய இடங்களில் ஏரிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழக சதுப்பு நில ஆணையம் செயல் இழந்துள்ளதாக கூறிய அவர், நீர் நிலைகளில் குப்பைகள் கொட்டப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

***************

பயிர் காப்பீடு

கடலூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள காரீஃப் பருவ பயிர்களை விவசாயிகள் காப்பீடு செய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் குறுவை பருவ பயிர்களை வரும் 31ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***************

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிட பழங்குடியினர், நரிக்குறவ மக்களுக்கான நலவாரிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் குடும்ப அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம் வரும் 25ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 18ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

பெரம்பலூர் மாவட்டத்தில் இணையதளம் வாயிலாக மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களை பதிவு செய்வோரின் வசதிக்காக வட்டாச்சியர், பேருராட்சி, நகராட்சி அலுவலகங்களில் வரும் 31 ஆம் தேதிவரை சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஸரண்யா அறி தெரிவித்துள்ளார்.

***************

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரிமலையில் நடைபெறும் கோடை விழாவின் நி்றைவு நாளான இன்று பல்வேறு

கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

<u>யானை</u>

ஈரோடு மாவட்டம் கடம்பூர் மலை கிராமமான இருட்டு பாளையத்தில் காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழந்துள்ள நிலையில், வன விலங்குகளால் மனித உயிர்கள் மற்றும் வேளாண் பயிர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதால் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் பாபநாசத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த கரடியை விரட்ட வனத்துறையினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

<u>கோவில்</u>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் கூட்டம் இன்று அதிகரித்து காணப்படுவதாக எமது தூத்துக்குடி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

<u>கால்பந்து</u>

FIFA உலக கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் நியூஜெர்சியில் அர்ஜென்டினா இன்று நள்ளிரவு 12.30 மணிக்கு ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

அதிகாலை நடைபெற்ற 3ஆம் இடத்திற்கான போட்டியில் இங்கிலாந்து – ஃபிரான்சை 6-4 என்ற கோல் கணக்கில் வென்று வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது.

***************

<u>கிரிக்கெட்</u>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்சில் இன்று நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சம நிலையில் உள்ளதால் இன்றைய போட்டி கிரிக்கெட் ரசிகர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

***************

<u>பேட்மிண்டன்</u>

ஜப்பான் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை இந்தியாவின் பி.வி.சிந்து கைப்பற்றியுள்ளார்.

இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சிந்து – ஜப்பானின் எமாகுச்சியை 21-17 21-17 என்ற நேர் செட்களில் வென்றார்.

பட்டம் வென்ற பி.வி.சிந்துவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ள மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா இந்த வெற்றியால் நாடு பெருமை கொள்வதாக பாராட்டியுள்ளார்.

***************